மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான முன்னணி
நிறுவனம்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 01 புதன்கிழமை (15 - 03 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 108

# டென்மார்க் தலைநகரில் புலிகள் பிரமுகர் திலகருடன் ஜனாதிபதி சந்திரிகா பேச்சு!

## கப்பலில் வந்த தபால் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச், 15
குமண கப்பலில் எடுத்துவரப்பட்ட தபால்கள் இன்று புதன்கிழமை முதல் உரியவர்களுக்கு தரம்பிரித்து விநியோகிக்கப்படுமென யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
இம்மாதம் 7 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்த குமணகப்பலில் எடுத்து வரப்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை முதல் 3 நாட்களுக்கு முழுநேர படகுச் சேவை

யாழ்ப்பாணம், மார்ச். 15
புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர உற்சவத்தை முன்விட்டு, கிளாலிப் படகுச் சேவை முழு நேரமும் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.
இந்த விசேட சேவை நாளை வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது
[ஒ-7]

## ஐ. தே. க. தேசியபட்டியல் இரு.எம். பிக்கள் நியமனம்

கொழும்பு, மார்ச். 15
ஐ தே.க. தேசியப் பட்டியலில் வெற்றிடமாகவுள்ள இரு நாடாளுமன்ற உறுப்பினர்; பதவிக்கு சட்டத்தரணி சரத் கோங்காகேயும், செய்தியாளரான திணேஸ்தொடங்கொடவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.
சரத்கொங்காகே ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் தலைவரும் ஆவார்.
(ஒ-6)

## மக்கள் கட்சி பிரமுகர்கள் ஐ.தே கவில் சேர்ந்தனர்

கொழும்பு, மார்ச். 15
ஸ்ரீலங்கா மக்கள் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்களான சம்லி குணவர்த்தன, சேனக அபேகுணசேகா, வெஸ்லி பெரேரா ஆகியோரும் அக்கட்சியைச் சேர்ந்த மற்றும் சில மாகாண சபை உறுப்பினர்களும் தொண்டர்களும் நேற்று ஐ. தே. கவில் இணைந்து கொண்டனர்.
ஐ. தே. க. தலைமையகமான ஸ்ரீ கோத்தாவுக்கு நேற்று நேரில் சென்று கட்சியின் விண்ணப்பப் படிவத்தை அவர்கள் ஒப்படைத்தனர்.
இதேவேளை —
ஐ தே. கவின் தேசியப் பட்டியல் எம். பியாக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவர் சரத் கோங்ககே, தாம் தமது கட்சியின் தனித்துவத்தைப் பேணிய வண்ண அக்கட்சியைக் கலைக்காது எம். பி. பதவியில் பணியாற்றப்போவதாக அறிவித்திருக்கிறார்.
(உ-6)

சமாதான முயற்சி ஒருபுறம் நடக்க

## மேலும் 2,000 பேரை படைக்குத் திரட்ட முடிவு

கொழும்பு, மார்ச். 15
இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவதாகக் கூறும் ஸ்ரீலங்கா அரசு —
மறுபுறத்தில் இராணுவத்துக்கு ஆள்திரட்டும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.
2 ஆயிரம் சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேர்ப்பதற்கான இடம்பெயர் நேர்முகப் பரீட்சைகள் கடந்த 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை தெற்கில் நடைபெற்றன என்ற தகவலை பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் ஒப்புக்கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.
அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் ஒருபுறம் நடக்க, மறுபுறத்தில் இராணுவத்தைப் பலப்படுத்துவது என்ற முடிவை அரசு கடந்த வாரம் மேற்கொண்டது.
இராணுவத்தின் பணிநிலை அதிகாரிகள் மற்றும் கனிஷ்ட அதிகாரிகள் பதவிக்கும் ஆட்கள் திரட்டப்படவிருக்கின்றனர்.
இதேவேளை —
30 ஆயிரத்துக்கும் அதிகமானோரைக் கொண்ட ஸ்ரீலங்கா தொண்டர் படைக்கும் மேலும் பல்லாயிரக்கணக்கானோரைத் திரட்டுவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது சமாதான முயற்சிகள் வெற்றியளித்தாலும் இத் தொண்டர் படை கலைக்கப்படமாட்டாது என பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை பாதுகாப்புப் படைகள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்திருக்கிறார்.
[உ-4]

## வடக்கில் பணியாற்ற வெளிநாட்டு டாக்டர்கள்

### அடுத்த மாதம் வருவர்

கொழும்பு, மார்ச். 15
வடக்கு, கிழக்கில் கிளிநொச்சி, திருகோணமலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு மற்றும் மல்லாவி ஆகிய பகுதிகளில் உள்ள கிராமிய ஆஸ்பத்திரிகளில் பணிபுரிவதற்காக நான்கு வெளிநாட்டு வைத்திய நிபுணர்கள் இலங்கை வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
அடுத்த மாதம் இவ்வைத்திய நிபுணர்கள் வந்து சேருவர் என்று கொழும்பில் உள்ள ஐ. நா. அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.
இரண்டு வருட ஒப்பந்தத்தின் கீழ் உள்ளூர் டாக்டர்களுடன் இணைந்து தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் இவர்கள் பணிபுரிவர் என்று அறிவிக்கப்படுகிறது.
இந்த நால்வரில் ஒருவர் கண் நிபுணர். இன்னொருவர் குழந்தைகள் நோய் நிபுணர், ஏனையோர் இருவரும் பொது வைத்திய நிபுணர்கள் ஆவர்.

## சுமுகமான நிலையில் 30 நிமிடங்கள் நடந்தது

லண்டன், மார்ச். 15
சர்வதேச உச்சிமாநாடு ஒன்றில் பங்குபற்றுவதற்காக டென்மார்க் தலைநகர் கொப்பன்ஹேகனுக்குச் சென்றிருந்த ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கு, விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் திரு. லோறன்ஸ் திலகரைச் சந்தித்துப் பேசினார்.
சுமார் முப்பது நிமிட நேரம் நீடித்த இந்தப் பேச்சுக்கள் ஆக்கபூர்வமானவையாக இருந்தன என்று பின்னர் ஜனாதிபதி சந்திரிகா பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பும் பேச்சும் முன்னர் திட்டமிடப்பட்டவையல்ல என்றும் —
திடீரென இடம்பெற்றவை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.
நேற்று முன்தினம் கொப்பன்ஹேகன் உச்சிமாநாட்டை முடித்துக் கொண்டு ஜனாதிபதி சந்திரிகா லண்டன் புறப்படவிருந்த வேளையில் கொப்பன்ஹேகன் விமான நிலையத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.
லண்டனுக்கு தாம் புறப்படவிருந்த வேளையில் அவசரமாக நடைபெற்ற இச்சந்
(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி மாமி?



உவர் சிலின்ரை மானம் லண்டன் வரைக்கும் கப்பல் ஏறிட்டுது எண்டு சொல்லுங்கோ... !

## பேச்சில் முன்னேற்றம் கண்ட பின்னரே புலிகள் கேட்பதைக் கொடுக்கலாம்

### பி. பி. ஸி. பேட்டியில் சந்திரிகா தெரிவிப்பு

லண்டன், மார்ச் 15
வி தலைப் புலிகள் புதிது புதிதாக நிபந்தனைகளை விதிக்கிறார்கள். அவற்றை எல்லாம் ஏற்றுக்கொண்டால் அவர்களுக்கு மட்டுமே சாதகமாகிவிடும்
பேச்சுவார்த்தையில் ஆக்கபூர்வமான முன்னேற்றத்தைக் காணும்போது மட்டுமே அவர்களின் நிபந்தனைகளை வழங்க முடியும்.
இவ்வாறு பி. பி ஸிக்கு நேற்று வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.
டென்மார்க்கில் நடைபெற்ற சமூக அபிவிருத்திக்கான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் அவர் நேற்று லண்டன் போய்ச் சேர்ந்தார்
அங்கு பி பி ஸிக்கு அவர் வழங்கிய பேட்டியின் போது—
அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை தடங்கலுற்று இருப்பதற்கான காரணம் என்ன? என்று செய்தியாளர் கேட்டார்.
அதற்குப் பதிலளித்து சந்திரிகா கூறியதாவது:
பேச்சுவார்த்தைக்கான திகதி ஒன்று குறித்து இணக்கம் காணாமையே இத்தடங்கலுக்குக் காரணமாகும். இது வரையிலும் திகதி குறித்து இணக்கம் காணப்படவில்லை.
சில நிபந்தனைகள் குறித்துப் பேசப்படவேண்டும் என்று விடுதலைப் புலிகள் கருதுகிறார்கள், அவர்கள் நேரத்துக்கு நேரம் புதிது புதிதாக பல்வேறு நிபந்தனைகளை சேர்க்கிறார்கள்.
அவர்கள் விதிக்கும் நிபந்தனைகள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டால் அவர்களுக்கு மட்டுமே சாதகமாக முடியும்.
(6 ஆம் பக்கம் பார்க்க)

புதிய அரசமைப்புத் திட்டத்தின் கீழ்

## கூடுதல் அதிகாரம் கொண்ட அலகை ஏற்படுத்த சகல கட்சிகளும் இணக்கம்

கொழும்பு, மார்ச் 15
புதிய அரசமைப்புத் திட்டத்தின் கீழ் கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட அதிகாரப் பரவலாக்கல் அலகை ஏற்படுத்துவதற்கு அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் சகல அரசியற் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.
இதனடிப்படையில், குறிப்பிட்ட விடயங்களில் இந்தியாவில் உள்ளதனை விட கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இந்தியாவில் மாநில அரசாங்கத்தை, அரசியல் காரணங்களுக்காக கலைத்துவிடும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது.
இலங்கையில் இவ்வதிகாரம் மத்திய அரசுக்கு வழங்கப்படக்கூடாது என்பதிலும், 13 ஆவது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் ... சட்ட வரைவின் கீழ் ... விடயங்களை மாகாண சபைகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதிலும் சகல கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன
இதேவேளை, தமிழ் - முஸ்லிம் மக்களது அரசியல் நலனை பாதுகாக்கும் ஒருமித்த கருத்தொன்றை அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான தெரிவுக்குழு முன்னிலையில் சமர்ப்பிப்பதற்கும முயற்
[6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளை தோற்கடிப்பது சாத்தியமான காரியமல்ல

### மக்களின் ஆதரவே காரணம்

கொழும்பு, மார்ச். 15
விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பது சாத்தியமான காரியமல்ல என்பதை இலங்கை மற்றும் இந்திய அரசுகள் அறிந்துள்ளன. காரணம் மக்களின் ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு இருப்பதேயாகும்.
சண்டே ரைம்ஸின் பாதுகாப்புச் செய்தியாளர் 'சமாதானப்பொறி' என்ற தலைப்பில் ... எழுதியுள்ளார்.
வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கப் படையினருக்கு எதிராக வியட்கொங் கெரில்லாக்களுக்கு கிடைத்த ஆதரவுக்கும் —
ஆப்கானிஸ்தான் யுத்தத்தில் சோவியத் படையினருக்கு எதிராக முஜாஹிதீன் கெரில்லாக்களுக்குக்கிடைத்த ஆதரவுக்கும் —
விடுதலைப் புலிகளுக்கு கிடைத்து வரும் ஆதரவுக்கும் வித்தியாசம் கிடையாது.
இவ்வாறு அந்தக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

மற்றொரு தாக்குதல் நிறுத்தமீறல்:

## புலிகள் ஆதரவாளர் 6பேர் வவுனியாவில் கைதாகினர்!

வவுனியா, மார்ச். 15
மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பொதுமக்கள் ஆறு பேர் வவுனியா தடைமுகாம் இராணுவத்தினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.
இந்த ஆறு பேரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறப்படுகிறது.
கடந்த 4ஆம் திகதி தனபாலசிங்கம், அரியராசா, சுரேந்திரகுமார், அற்புதராசா ஆகியோரும் கடந்த 7ஆம் திகதி ரிஷிகேசன், தர்மலிங்கம் ஆகியோரும் கைது செய்ப்பட்டனர்.
இவர்கள் கைது செய்யப்பட்டமை தாக்குதல் நிறுத்தத்தை மீறிய செயலாகும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ஒ)

சிசில் மீதான குற்றச்சாட்டு:

## விசாரணை நடத்துவதற்கு டி.ஐ.ஜி. லண்டன் பயணம்

கொழும்பு, மார்ச். 15
ஆயுதக் கொள்வனவில் மோசடி செய்ததாகக் கூறப்படும் முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து லண்டனில் விசாரணை இடம்பெறுவதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் ரி. பி. சுமதிரத்ன கடந்த வார இறுதியில் விசாரணைக்காக லண்டன் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

உண்ணாவிரதம் இருக்கும்

## சிங்கள யுத்தக் கைதிகள் வாசுதேவவுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
நேற்று தொடர்ந்து பதின்நான்காவது நாளாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த சிங்கள யுத்தக் கைதிகள்—
யாழ் அரச அபதிர் ஊடாக வாசுதேவ நாணயக்காரவுக்கு கடிதம் ஒன்றை அனுப்ப ஏற்பாடு செய்திருந்தனர்
நீரருந்தாமல் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கிய நாங்கள், வாசுதேவ நாணயக்காரா விடுத்த கோரிக்கையை அடுத்து நீரருந்தி உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினோம்.
ஆனால், அதன் பின்னர் நாணயக்கார இது விடயத்தில் — எதுவித தொடர்புகளையும் மேற்கொள்ளாதது — எமக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளது என்று தெரிவித்தனர்.
அதை அடுத்தே தாம் வாசுதேவவுக்கு தமது நிலையை விளக்கி கடிதம் எழுதியுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.
(ஒ)

## வாகன வரி அட்டையை 20-ம் திகதிக்கு முன்பெறுக!

யாழ்ப்பாணம், மார்ச் 15
மோட்டார் வாகனங்களுக்கான 1995 ஆம் ஆண்டுக்குரிய வரி அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கான கால எல்லை எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் முடிவடைவதாக போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் வாகனப் பதிவுப் பகுதியினர் அறியத்தருகின்றனர்.
மோட்டார் வாகனங்களுக்கான வரி அட்டை யாழ் மாவட்டத்தில் உதவி அரச அதிபர் ரீதியாக கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. [ஒ]

யோசனை சமர்ப்பிக்க

## காலம் பிந்திவிட்டது என்கிறார் தொண்டா

இனப்பிரச்சினை குறித்து இ.தொ.கா தனது யோசனைகளைச் சமர்ப்பிப்பதற்கு காலம் பிந்திவிட்டது எனினும் இப்பிரச்சனைக்கு தீர்வு காணுவதில் ஜனாதிபதி உறுதியாக முன்னேறிச் செல்கிறார்.
அமைச்சர் தொண்டமான் முன்கண்டவாறு சண்டே லீடருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.
''முன்னைய அரசின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எனது யோசனைகளை இரு தடவைகள் சமர்ப்பித்தேன் ஆனால் ஏமாற்றம் தான் கிடைத்தது.
''பொ.ஐ.மு. அரசு இது வரை என்னை இதுதொடர்பாக அணுகவில்லை. இனி புதிய யோசனைகளை நாம் சமர்ப்பிப்பதற்கு காலம் போய்விட்டது
''இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஜனாதிபதியினால் விரைவில் காணப்படும் என்று நான் நம்புகின்றேன் நாம் பொறுத்திருந்து பார்ப்போம்'' — என்று அவர் கூறினார்
போரில் ஈடுபட்டுள்ள தரப்பினரே பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்; முடிவற்ற இந்த யுத்தத்தையும் அவர்களால் தான் நிறுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொழிநுட்பக்கல்லூரி

## இறுதிப்பரீட்சைகள்-1994

கீழ்க்காணும் திகதிகளில் குறிப்பிட்ட பயிற்சி நெறிகளுக்கான பரீட்சைகள் ஆரம்பமாகும்:

**27 — 03 — 1995**
இல் தொடங்குர்பயிற்சி நெறிகள்

1. கணக்கியல் உயர் தேசிய டிப்புளோமா II (H. N. D. A II) (D 113 & D 126)
2. கணக்கீட்டுத் தொழிநுட்பவலருக்கான தேசிய தராதரப் பத்திரம் (NCAT) (C 90)
3. பயில்நிலை வரைஞருக்கான தேசிய தராதரப் பத்திரம் [DA] [T 55]

**03 — 04 — 1995**

1. தொழிநுட்பவியலிலான தேசிய தராதரப்பத்திரம் [குடிசார், மின்சாரமும் இலத்திரனியலும், பொறியியல், கணிய அளவீடு] [NCT — CE, EE, ME & QS] [E10, 12, 11&13]
2. கணக்கியலிலான உயர் தேசிய டிப்புளோமா—III [HNDA III] [D114 & D128]
3. ஆங்கிலத்தில் தேசிய டிப்புளோமா— [NDE] [D119]

**24 — 04 — 1995**

1. ஆங்கிலத்தில் தேசிய தராதரப்பத்திரம் [NCE] [C86]
2. வியாபாரக் கற்கைகளில் தேசிய டிப்புளோமா [NDBS] [D107]
3. கணக்கியல் உயர் தேசிய டிப்புளோமா II [HNDA IV] (D118 & D129]
4. வணிகவியலிலான உயர் தேசிய டிப்புளோமாII,III [HNDCII & III] [D99 & D101]
5. வியாபாரக் கற்கைகளிலான தேசிய தராதரப் பத்திரம்—புதிய பாடத்திட்டம் [பொது நிர்வாகம்] [NCPA] [C 87]
6. வியாபாரமும் நிதியியலிலுமான தேசிய டிப்புளோமா [NDBF] [D127]
7. தொழிற் பயிற்சிநெறிகள் —(வானொலி மற்றும் இலத்திரனியல், மோட்டார் வாகன வல்லுநர், [மின்கம்பி இணைத்தல் 1வருடம், திறாக்ரர் பொறிவலர் 1வருடம், வானொலி பேணல் 1வருடம்)

[Trade Courses) [REM II] AMII, EWE, TRM & RS] [T25 T52]

**16 — 05 — 1995**

1. பொறிக் கைப்பணியாளர் தேசிய தராதரப்பத்திரம், [நீர்க்குழாய் 1வருடம், மரப்பொறியியக்க வல்லுநர் 1வருடம், மின்னியலாளர் 2வருடம், பொருத்து வல்லுநர் 2 வருடம்] [PL, WM, EWD, AM] [NCECP] [E14 - E28]
2. வணிகவியலிலான உயர் தேசிய டிப்புளோமா II [1994இல் நடந்த புதிய பாடத்திட்டம்] (HNDC II] (New Syllabus)

பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைப் பெறுவது தொடர்பாக கல்லூரியில் குறித்த பகுதித் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

க. ஜெயரத்தினம்.
அதிபர்.

தொழிநுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1995-03-14 [சி/758]

## கண்ணீர் அஞ்சலி

**சுப்பிரமணியம் - இரத்தினமணி**

எமது கல்லூரி ஆசிரியை திருமதி உமாதேவி நடராஜா அவர்களின் தாயார் திருமதி சுப்பிரமணியம்-இரத்தினமணி 11-3-95 அன்று காலமான செய்தி கேட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்.
இராமநாதன்
கல்லூரி சுன்னாகம்.

[8285]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 11 — 1939

மறைவு: 15 — 03 — 1994

**மோசேஸ் பிலேந்திரன்**

அன்பெனும் விளக்கு அணைந்து இன்று
ஆறிரு திங்கள் சென்று மறைந்தது – ஆயினும்
உன்முகப் புன்னகை உதைபந்தாட்டமும்
எம்மவர் மனதில் நின்று நிலைக்குதே!
கனவினில் நினைவுகள் காவியம் ஆகுதோ?
நினைத்த எம் நெஞ்சம் நிம்மதி இழந்ததே.

பிரிவில் நின்று உறவை நினைப்பவர்
மனைவி, மக்கள், குடும்பத்தினர்.
[35703]

அம்பாள் துணை

ஏழாலை மத்தி
அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலயம்

### புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அம்பாள் திருவுருவம்

## பிரதிஷ்டை வைபவம்

காலம்; **15 - 03 - 95** காலை 9 மணியளவில் நல்லை வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் இருந்து யாழ். நகரத்தினூடாக காங்கேசன் துறை சாலை வழியாக திருவுருவ ஊர்வலம் ஆலயத்தை வந்தடையும்.

**16 - 03 - 95** சாந்தி யாக பூஜை கிரியை தொடங்கி நடைபெறும்.

**17 - 03 - 95** அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று விசேட ஆராதனைகள், வழிபாட்டைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெறும்.

[8283] பூசகர் ஐயா

## இணைப்பாளர் தேவை

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைக்கு பொறுப்பாள்கை (நிர்வாக) இணைப்பாளர் தேவை. நிர்வாகத்துறை சார்ந்த அறிவும், ஆற்றலும் பட்டறிவும் (குறிப்பாக கணக்கியல் அறிவும்) உள்ளவர்கள் முழுநேரப் பணிப்பாளராகக் கடமை புரியக் கூடியவர்கள் தங்கள் வேண்டுகைகளை (விண்ணப்பங்களை) கல்வித் தகைமையுடனும் பிற தகைமைகளைக் குறிப்பிட்டு 24 – 03 – 95 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவை

எண்:- 680
தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவை,
பருத்தித்துறைச்சாலை,
நல்லூர். (35697)

## தேர்வு அலுவலர் தேவை

தமிழீழ கல்வித் தேர்வுச் சபைக்கு அலுவலர் தேவை. தேர்வுகளுடன் தொடர்புடைய, துறை சார்ந்த அறிவும், ஆற்றலும் பட்டறிவும் உடையவர்கள், தேர்வுச் சபையின் முழுநேர அலுவலராக கடமைபுரிய விரும்புவோர் தங்கள் வேண்டுகையுடன் [விண்ணப்பத்துடன்] பட்டறிவுகளை [அனுபவங்களைக்) குறிப்பிட்டு வேண்டுகையினை [விண்ணப்பத்தினை] 24-3-95க்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும் (ஊதியம் நேரில் கதைத்துத் தீர்மானிக்கப்படும்]

எண் : **680**
தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை,
தேர்வுச் சபை,
பருத்தித்துறைச்சாலை,
நல்லூர்.

தமிழீழத் தேர்வு ஆணையாளர்.
(35698)

## உதவி ஆசிரியர் தேவை

தமிழீழக் கல்விமேம்பாட்டுப் பேரவையின் ஆசிரியர் வாண்மை விருத்திக் குழுவினால் வெளியிட்படும் விளக்கு மாத இதழுக்கு உதவி ஆசிரியர் தேவை. தமிழ் மொழியில், கல்வி மேம்பாட்டில், ஆசிரியர் வாண்மை விருத்திக்கு உதவக் கூடிய அனுபவமும், ஆற்றல்களும், அறிவும் உடையவர்கள் அவற்றைக் குறிப்பிட்டு தங்கள் வேண்டுகை (விண்ணப்பத்தை) **28- 03- 95** செவ்வாய்க்கிழமைக்கு முன்னமாக பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆசிரியர் வாண்மை விருத்திக்குழுத் தலைவர்

எண்: 680
தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை,
பருத்தித்துறைச்சாலை,
நல்லூர்

(35696)

### நாகதம்பிரான் பொங்கல்

சாவகச்சேரி, மார்ச் 15

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப் பொங்கல் வைபவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இரவு நடைபெறவுள்ளது.

பொங்கலுக்குரிய பொருள்கள் இன்று பிற்பகல் 2மணிக்கு வழமை போல மீசாலையில் உள்ள பண்ட மரவடியில் இருந்து மேள தாள வாத்தியங்களுடன் ஊர்வலமாக கண்டி வீதி வழியாக பளை இரட்டைக்கேணி அம்மன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

அங்கிருந்து மறுநாள் வியாழன் கிளாலிக் கடல் வழியாக வெள்ளி பிற்பகல் புளியம் பொக்கணைக்கு பொங்கல் பொருள்கள் கொண்டு செல்லப்பட்டு அங்கு பொங்கல் நிகழ்வுகள் நடைபெறும்.

(ஒ-31)

### அழைத்து செல்ல ஏற்பாடு

இலங்கை கல்வி நிர்வாக சேவைத் தேர்வுக்காக கொழும்பு செல்லவுள்ள தேர்வாளர்களுக்கான பேருந்து இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ். பேருந்து நிலையத்திலிருந்து கிளாலி நோக்கிப் புறப்படும்.

இதில் பயணம் மேற்கொள்ளுவதற்காக தமிழீழக் கல்விக் கழகத்தில் பதிவு செய்த தேர்வாளர்கள் குறிப்பிட்ட நேரத்தில் பேருந்து நிலையத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

[ஒ-4]

### நேர்காணல்

யாழ்ப்பாணம், மார்ச்.15

தமிழீழ வைப்பக அலுவலர் மற்றும் மேற்பார்வையாளர் பணிநிலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் இன்றும் நாளையும் தமிழீழ வைப்பகத்தில் நடைபெறும் என்றும் —

இளநிலை எழுதுநர் மற்றும் உதவிக்காசாளர் பணிநிலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துத் தேர்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்றும் தமிழீழ வைப்பக பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அனுமதிக் கடிதங்கள் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. என்றும் அறிவிக்கப்பட்டது.

[ஒ]

**O/L**
**விஞ்ஞானம்**
**Mr. J. R. சூரி**
பிரிவு **II**
ஆரம்பமாகியுள்ளது.
சனி, ஞாயிறு **6-30** முற்பகல்
வெள்ளி **5-30** பிற்பகல்

**ஆண்டு**
**10, 9 க்குரிய**
சகல வகுப்புகளும் நடைபெறுகின்றன

**SHAMROCK**
யாழ். சுண்டிக்குளி.
[35694]

உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான பவ வருஷம் பங்குனித் திங்கள் 1 ஆம் நாள்[15-03-95] புதன்கிழமை மாலை 4 மணி முதல் 6 மணி வரையுள்ள பூரநட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| திரு. திருமதி வைரமுத்து [பன்னாலை, தெல்லிப்பளை] தம்பதிகளின் புத்திரன் திருநிறைசெல்வன் **விக்னேஸ்வரன்** அவர்கட்கும் | திரு. திருமதி பாலசுப்பிரமணியம் (தொட்டிலடி, சங்கானை) தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி திருநிறைசெல்வி **சகுந்தலா** அவர்கட்கும் |

திருவருள் துணைகொண்டு திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறும் இடம்:
ஒல்ரன் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்
HOLDERMATT STR. 3 SWISS

தங்களை தாழ்மையுடன் அழைக்கின்றோம்
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி சி. வைரமுத்து
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

திருமதி நா பாலசுப்பிரமணியம்

[8284]

தாவடி
ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய

## மகோற்சவம்

காலம்: பவ வருடம்
பங்குனி மாதம் **15** ஆம் திகதி **[ 29 - 03 - 95 ]** காலை **10 00** மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இரவு தெய்வீகப் பேருரைகள் தொடர்ந்து **18** தினங்களும் நடைபெறும்.

யுவ வருடப்பிறப்பு அன்று

14-04 95 காலை 8.00 ரதோற்சவம் [வெள்ளி]
15-04-95 காலை 8.00 தீர்த்தோற்சவம் [சனி]
16 04-95 காலை 8.00 பிராயச்சித்த அபிஷேகம்
16 04-95 மாலை 4 00 திருக்கல்யாண வைபவம்

இங்ஙனம்
மகோற்சவ உபயகாரர்களும்
தொண்டர் சபையினரும்

[சி/764]

## ஈவ்லின் இரத்தினம்

### பல்லினப் பண்பாட்டு நிறுவனம்

கருத்தரங்கு:-
**"இலங்கைக்கு ஒரு கூட்டாட்சி"**

உரைவழங்குபவர்:-
**கலாநிதி எஸ்.கே.எஸ். நாதன்**
(யாழ். பல்கலைக்கழகம்)

காலம்:- இன்று 15-03-1995
நேரம்:- பிற்பகல் 3.30 மணி

தலைமை:-
**பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்**

இடம்:- நிறுவன நூலகமண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எஸ். சிவலிங்கராஜா
— இயக்குநர்.

**ஈவ்லின் இரத்தினம்**
**பல்லினப் பண்பாட்டு நிறுவனம்**
(சி/762)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**செல்லப்பா சோமலிங்கம் (சோமு)**
(ஓய்வுபெற்ற அதிபர்)

அன்னையின் மடியில்: **20-06-1932**
காலன் கையில்: **13-02-1995**

அன்பும், பண்பும் நிறைந்து அனைவர்க்கும் தொண்டனாய், நல்லாசிரியனாய் பகிடிமொழி பேசி யாவரையும் மகிழ்விக்கும் அறிஞனாய், நண்பனாய், எங்கள் துணைவனாய் விளங்கிய தெய்வமே உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

13-02-1995 புதன்கிழமை நடைபெற்ற அன்னாரின் மரணச்சடங்கில் பங்குபற்றி உதவி புரிந்தவர்களுக்கும், மலர் மாலை, மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும் எங்கள் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் 15 - 03 - 1995 புதன்கிழமை நடைபெறும் அவரது அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். [8282]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சியின் அவைத் தலைவர் பதவியை துறப்பதாக ஹமீத் மிரட்டல்!

## முஸ்லிம் ஒருவரை எம் பியாக்கக் கோருகிறார்

கொழும்பு, மார்ச் 15
ஐக்கிய தேசியக் கட்சியின் அவைத் தலைவர் ஏ. சி. எஸ். ஹமீத் தனது பதவியில் இருந்து விலகப் போவதாக எச்சரிக்கை விடுத்திருப்பதாக நேற்றைய 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தேசியப் பட்டியல் எம். பிக்களுக்கான இரு வெற்றிடங்கள் தொடர்பாக கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெற்றிடமாக உள்ள இரு தேசிய பட்டியல் எம். பிக்கள் பதவிக்கும் தினேஷ் தொடங்கொட, சரத் கோஹன்கதே ஆகியோரை நியமிப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவரும், கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா முடிவெடுத்துள்ளார்.

இந்த முடிவை மாற்றுவதற்கும் ரணில் பிடிவாதமாக மறுத்து வருகிறார் என்று கூறப்படுகிறது.

ஆனால் ஜனாப் ஏ.சி.எஸ். ஹமீத் தேசிய பட்டியல் எம். பிக்களாக நியமிக்கப்பட உள்ள இருவரில் ஒருவர் முஸ்லிமாக இருக்கவேண்டும் என்று கோரி வருகிறார்.

தமது கோரிக்கை நிறைவேறாவிடில் கட்சியின் அவைத் தலைவர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்யப் போவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ)

# அரச ஊழியரை ஏமாற்றி பண மோசடி

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு, மார்ச் 15
அரசாங்க ஊழியர்களுக்கு வன்செயல் நஷ்டஈடு பெற்றுத் தருவதாகக் கூறி பலரை ஏமாற்றி பண மோசடி செய்த நபர் ஒருவர் மட்டக்களப்பில் கைதாகி உள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் மாவடிவேம்பு என்ற கிராமத்தில் வைத்து பொலீஸார் இவரைக்கைது செய்தனர்.

மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

வன்செயல் நஷ்டஈடு கோரி விண்ணப்பித்த அரசாங்க ஊழியர்கள் பலரின் வீடுகளுக்குச் சென்ற இவர் நஷ்டஈடு வழங்குவதற்கான அங்கீகாரம் வந்துவிட்டதாகக் கூறி முத்திரைச் செலவுக்காக 500 ரூபா பணம் பெற்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வன்செயல் நஷ்டஈடு பெறுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட அரச ஊழியர்களின் பெயர் விவரங்கள் இந்த நபருக்கு எப்படிக் கிடைத்தன என்பதையிட்டு பொலீஸார் ஆச்சரியம் தெரிவித்தனர். (இ)

## அறிஞர் வெளியேற்றம் குறித்த

# இந்தியாவின் விளக்கத்தை சுவீடன் அரசு நிராகரித்தது

ஒஸ்லோ, மார்ச் 15
எட்டாவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற சுவீடன் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர்ஷோக்கை வெளியேற்றியது தொடர்பாக—

இந்திய அரசு முன்வைத்த விளக்கங்களை சுவீடன் அரசு முற்றாக நிராகரித்துள்ளது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தஞ்சாவூர் சென்ற பின்னர், தமிழக அரசினால் வெளியேற்றப்பட்ட மொத்தம் 24 பேராளர்களில் —

சுவிடன் நாட்டு உப்சலா பல்கலைகழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் ஷோக்கும், பேராசிரியர் அ. வேலுப்பிள்ளையும் அடங்குவர்.

பேராசிரியர் பீற்றர் ஷோக்கிற்கு தம்மால் போதிய பாதுகாப்பு வழங்க முடியவில்லை என்று இந்திய அரசு தெரிவித்ததை ஏற்றுக்கொள் முடியாது என்று —

சுவீடன் அரசு இந்திய அரசுக்கு ஆட்சேபம் தெரிவித்திருப்பதாக —

அவுஸ்திரேலியாவில் இருந்து வெளிவரும் "தமிழ் உலகம்" (தமிழ் – ஆங்கில) பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

தமிழக அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்ட பேராளர்கள் 24 பேரும் மாநாட்டுக் குழுவின் அழைப்பின் பேரில் சென்றவர்களே என்றும் – "தமிழ் உலகம்" பத்திரிகை தெரிவித்துள்ளது. [அ–5]

## பளைப் பகுதியில் உள்ள

# செந்தில்நகர் குடியிருப்பை புனரமைக்க நடவடிக்கை

தமிழர் புனர் வாழ்வுக் கழக பளைப் பிரிவினர் எழுச்சி உதயம் திட்டத்தின் கீழ் பளை செந்தில் நகர் குடியிருப்பை புனரமைக்கவுள்ளனர்.

இத் திட்டத்தின் கீழ் இக் குடியிருப்பில் உள்ள வீதிகளைச் செப்பனிடவும், பாலர் பாடசாலையினை அமைக்கவும் குழாய்க் கிணறுகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இக் குடியிருப்பில் இயக்கச்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ–117)

# அயடீன் கலந்த உப்பு பாவனைக்கு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 15
உப்பில் அயடீன் கலப்பு தொடர்பான உணவுத்திட்ட விதிகளை கடுமையாக அமுல் செய்யவிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அயடின் சத்து குறைவாக உள்ளதால் ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகளை தடுக்கும் முகமாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான சோதனைகளை நாடு முழுவதிலும் மேற்கொள்ள அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இச் சோதனைகளில், பொது சுகாதார பரிசோதகர்கள், ஆய்வாளர்கள் போன்ற சுகாதார அமைச்சின் அதிகாரிகள் ஈடுபடுவர்.

அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு கூடங்களில் அயடீன் கலக்கப்பட்ட உப்புக்கள் பரிசோதிக்கப்பட்டு – அவற்றின் தரமும், தன்மையும் உறுதிப்படுத்தப்படும்,

இவ்வாறு உரிய தரமும் தன்மையும் அல்லாத அயடீன் கலந்த உப்பு பைக்கற்றுகள் பற்றி சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்படும்,

இதனடிப்படையில் தரம் குறைந்த உப்பு பைக்கற்றுக்களை விற்பனை செய்வோருக்கு எதிராக உணவுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

அயடீன் சத்துக் குறைவினால் குரல்வளை சுரப்பி வீக்கம், ஊட்டச்சத்து பற்றாக்குறை, மந்த புத்தி போன்ற குறைபாடுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

உணவுச் சட்டத்தை மீறுவோருக்கு 10ஆயிரம் ரூபா வரை அபராதம் விதிக்க சுகாதார அமைச்சின் உணவு விரிவாக்கல் பிரிவு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது. (ஐ–5)

# சந்திரிகா நாடு திரும்பிய பின்னரே முட்டுக்கட்டை நீக்க முயற்சிக்கப்படும்

## பிரதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 15
முட்டுக்கட்டை நிலையில் இருக்கும் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான வழிவகைகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாட்டுச் சுற்றுலாவை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னரே, அரசாங்கம் தீர்மானிக்கும்

திட்டமிடல் இன விவகார தேசிய ஒருங்கிணைப்பு பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மேற கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உலக சமூக அபிவிருத்திக்கான உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக டென்மார்க் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா, அங்கிருந்து லண்டன் செல்ல இருப்பது தெரிந்ததே

பூநகரி முகாமை அகற்றுதல் உட்பட விடுதலைப் புலிகளின் நான்கு கோரிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு நிராகரித்ததை அடுத்து சமாதான முயற்சிகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [இ]

# பூந்தமல்லி சிறைப் பாதுகாப்பு குறித்து புலனாய்வுப் பிரிவு மாநாடு

சென்னை, மார்ச் 15
ராஜீவ் படுகொலை பற்றிய வழக்கு விசாரணை இடம் பெற்றுவரும் சென்னை, பூந்தமல்லி சிறப்பு சிறைச்சாலை வளாகத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்துவது குறித்து ஆராய இந்தியாவின் விசேட புலனாய்வுப் பிரிவு விசேட கூட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இச்சிறைச்சாலை வளாகத்தினுள் விசேட புலனாய்வுப் பிரிவின் தலைமையகம் 'மல்லிகை' —

வழக்கு விசரணைக்கு உதவும் அரச சட்டத்தரணிகள்— அதிகாரிகள் மற்றும் பொலீஸகர்— ஆகியோரின் தனிப்பட்ட பாதுகாப்பு பற்றி இக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிகிறது.

மத்திய ரிசர்வ் பொலீஸ் படை மற்றும் தமிழ் நாடு விசேட பொலீஸ் படை ஆகியவற்றைச் சேர்ந்த இரண்டு கம்பெனிகள் பூந்தமல்லி விசேட சிறைச்சாலை வளாகத்தை ஏராளமான ஆயுதங்களுடன் காவல் புரிந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ–இ)

# ராவைக் கொல்ல புலிகள் திட்டம் என்கிறார் சுப்பிரமணியம் சுவாமி

புதுடில்லி, மார்ச் 15
இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவைக் கொலை செய்து விட்டு அந்த இடத்துக்கு தமக்கு ஆதரவான ஒருவரைக் கொண்டு வருவதற்கு விடுதலைப்புலிகள் சதி செய்து வருவதாக ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

மதுரையில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் டாக்டர் சுவாமி இதனைத் தெரிவித்ததாக இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இக்கொலைச் சதித்திட்டத்தை முறியடிக்கும் நடவடிக்கையாக திரு பிரபாகரனைப்பிடிப்பதற்கு கொமாண்டோ படை ஒன்று அனுப்பப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

திரு. பிரபாகரனைக் கைது செய்வதற்கு இன்ரபோல் நிறுவனம் உஷார் நடவடிக்கை எடுத்திருப்பதால் பிரபாகரனுடன் ஜனாதிபதி சந்திரிகா பேச்சு நடத்த முடியாத நிலையிருப்பதாகத் தாம் உணர்வதாகவும் அவர் கூறினார். (இ-எ)

# 69 இந்துக் கோயில்கள் கிழக்கில் முற்றாக அழிப்பு!

கொழும்பு, மார்ச் 15
கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கிழக்கு மாகாணத்தில் 69 இந்துக் கோயில்கள் பெருஞ்சேதமடைந்துள்ளன அல்லதுமுற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இக் கோயில்களை மீண்டும் புனரமைப்பதற்காக கலாசார அமைச்சும், புனர் நிர்மாண அமைச்சும் திட்டங்களைத் தயாரித்து வருவதாக 'யுக்திய' சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ–10)

## வங்கியாளர் பரீட்சை மாணவருக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 15
இலங்கை வங்கியாளர் நிலைய பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை 16ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இக் கலந்துரையாடலை, இலங்கை வங்கியாளர் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது. (இ-5)

# தமிழக இலக்கியத்துடன் போட்டியாக ஈழ இலக்கியம் வளர்ந்துள்ளது

## 'மரக்கொக்கு' அறிமுக விழாவில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 15
இன்று ஈழத்து இலக்கியம் தமிழகத்து இலக்கியத்தை விட கனங்காத்திரமானது என்று பார்க்கும் அளவுக்கு வளர்ந்து வருகிறது சமூகத் தொடர்புகள், சமூகநிரவாகம், சமூக இயக்கம் என்ற மூன்றையும் தொகுத்து கலைவடிவமாக்குபவனே எழுத்தாளன்.

தெணியானின் ஐந்தாவது படைப்பான 'மரக்கொக்கு' நாவல் அறிமுகவிழாவில்உரை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் காலநிதி சபா. ஜெயராஜா மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விழா தேவரையாளி இந்துக் கல்லூரியில் யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா. ஞானகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

கலாநிதி சபா. ஜெயராஜா மேலும் பேசுகையில் தெணியான் இந்த நாவலில் தலை உள்ளடக்கங்களை மிகத் திறமையாக எடுத்துள்ளார். தெணியானின் சமூகப்பார்வை பாராட்டத்தக்கது என்றார்.

விழாவில் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி, டாக்டர் எம். கே. முருகானந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து நூல் அறிமுகவுரையை மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா நிகழ்த்தினார்.

அவர் தனதுரையில், யாழ்ப்பாணச் சமூகத்தின் குறியீடாக இந்த நாவலை தெணியான் படைத்துள்ளார் என்றார்.

மதிப்பீட்டுரையை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த திரு. அரசண்ணா இந் நாவலில் வரும் விஜயலட்சுமி என்ற பாத்திரம் ஒரு சமூகத்தின் அகம்பாவக் குரலாக மேல் எழுந்து நிற்கிறது ஈழத்தில் வெளிவந்த நல்ல நாவல்களில் இதுவு மொன்று. அந்தப் பாத்திரம் தான் சமூகத்தை இழுக்கும் தெணியான் என்றார்.

தெணியான் சமூகத்தின் மீது கொண்ட பிரக்ஞையால் எழுதுபவர். சமூகக் கொடுமைகளை எழுதுபவர். சமூக நீதிக்காக குரல் தரும் படைப்புக்களை விடுதலைப் புலிகள் என்றும் வரவேற்பார்கள் என்றும் அவர் கூறினார்.

அவரைத் தொடர்ந்து பேசிய, யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறைத்தலைவர் கலாநிதி சோ. கிருஷ்ணராஜா, தெணியானின் இந் நாவல் பல செய்திகளை எமக்குத் தருகிறது ஒரு நல்ல இலக்கியம் பல்வேறு ரசனைகளை வாசகனுக்குத் தர வேண்டும். இந்த நாவலும் அத்தகைய ரசனைகளை தருகின்றது.

இந் நாவலில் தெணியான் சமூக அநீதிகளை எழுதி உள்ளார். இந் நாவல் சமூகத்தை மாற்றாவிட்டாலும், சில அருட்டல்களையாவது ஏற்படுத்த முனையும் என்றார்.

இறுதியில், நாவலாசிரியர் தெணியானின் பதிலுரை இடம்பெற்றது. (இ)

## ஆலயங்களில் சுகாதாரம் பேணக் கோரிக்கை

தெல்லிப்பளை, மார்ச் 15
ஆலய உற்சவங்கள் ஆரம்பமாவதால் உற்சவ காலங்களில் ஆலயச் சுற்றாடலில் சுகாதாரத்தை பேண நடவடிக்கைஎடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஆலய உற்சவங்களில் கூடும் பக்தர்கள் தமது உபாதைகளை கழிக்க, போதிய வசதிகள் செய்யப்படாத காரணத்தால், ஆலய சுற்றாடல்கள் அசுத்தமாவதாக கோயில் நிர்வாகிகள் கவலை தெரிவிக்கின்றனர்,

ஆலயச் சுற்றாடல்களில் விசேட மலசலகூட முறைகளை அமைப்பதன் மூலம் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு நோய்கள் பரவாமல் இருக்க செய்ய முடியும் என்று ஆலோசனை கூறப்படுகிறது. (இ–68)

## மாணவருக்கு தங்கப் பதக்கம்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மாணவர் இருவர் 'பாடசாலை நட்சத்திரங்கள்' என, தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி சி ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்கள் ஆவர்.

இப் பாடசாலையில் கணிதத்துறையில் பயின்ற செல்வன் ஐ. சதானந்தன் 4ஏ பெற்று, மாவட்ட ரீதியில் 2ஆம் இடத்தையும், தேசிய ரீதியில் 4ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

கலைப் பிரிவில் பயின்ற செல்வன் செ. ஜேசுதாஸ் 3ஏ, 1பி பெற்று. மாவட்ட ரீதியில் 7ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற பாடசாலை வைபவம் ஒன்றில், யாழ். வலயம் 2 இன் கல்விப் பணிப்பளர் திரு. க. கந்தசாமி இவர்களுக்கான பதக்கங்களை அணிவித்தார்.

இப்பதக்கங்களை பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் வழங்கியிருந்தன. (இ 5–89)

## புலிகளின் குரல் வானொலியில்

15 — 03 — 1995
**புதன் இரவு**

- ★ 8–01 — குயிலோசை ஒயிலாட்டம்
- ★ 8–20 ஏர்முனை நிகழ்ச்சியில் 'எமக்குத் தேவையானதொழில் நுட்பம்'' விவாத அரங்கம்
- ★ 8–30—செய்திகள்
- ★ 8–40—நாடகம் கருணை ரவி எழுதிய ''மண்ணோடு மாப்பிள்ளை'' என்பன இடம்பெறும்.

16 — 03 — 1995
**வியாழன் காலை**

- ★ 7–02 — மாவீர வணக்கம்
- ★ 07–15— விடுதலைகீதங்கள்
- ★ 7–30 — செய்திகள்
- ★ 7–35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 07–40— விடுதலைகீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம் பெறும்.

## தமிழீழ வானொலி

**ஒலிபரப்பு**
**புதன் மாலை**

- ★ 5–01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5–02 — எழுச்சிகீதம்
- ★ 5–10 புதியவை
- ★ 5–15— படப்பாடல்கள்
- ★ 5–30—அறிவூற்று
- ★ 6–00— சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6–02—உங்கள் தெரிவு
- ★ 6–15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6–20உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி


புங்குடுதீவு – நயினாதீவு
ப. நோ. கூ. சங்கம் (வ – து)

## பதவி வெற்றிடம்

**பொது முகாமையாளர் தரம் III**

1. கல்வித் தகைமைகள்:

அ. கூட்டுறவு வேலையாளரின் 8ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமைத்துவ / மேற்பார்வையாளர் பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு வேலையாளர் 9ஆவது சம்பளத் திட்டப் பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி அல்லது சம மதிப்புள்ள தராதரமும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவ மட்ட பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறி (உயர் தரம்) தராதரப்பத்திரம் / க. பொ. த. (உயர்தரம்) தராதரப்பத்திரத்தில் 3 பாடங்களில் சித்தியும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவ மட்டப் பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. சம்பளத் திட்டம்:
$\frac{1305 - 2370}{60 \times 4 - 75 \times 11}$ இதர படிகளும்

3. வயதெல்லை:
23 — 50

4. பிணை ரொக்கம்:
3.000/– உறுதிப்பிணை 5 000/–

5. விண்ணப்ப முடிவு திகதி: 31–03–1995

விண்ணப்பங்கள்:

தலைவர்
புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ கூ. சங்கம்,
இல. 201/1. 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்

தலைவர்,
புங்குடுதீவு-நயினாதீவு,
ப. நோ. கூ. சங்கம்,
யாழ்ப்பாணம்

(சி–757)



## தவறிவிட்டது

11 — 3 — 1995 அன்று காலை 10–20 — 11-00 மணிக்கும் இடையில் யாழ். பஸ்நிலைய சந்திக்கும் தண்ணீர் தாங்கிக்கும் இடையில் பச்சை நிற பெண்கள் பேஸ் ஒன்று ஒரு தொகைப்பணத்துடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்;

Becon கல்வி நிலையம், யாழ்ப்பாணம்.
பொருளியல் கல்வி நிலையம், சுண்டிக்குளி
எனும் முகவரிகளுடன் தொடர்பு கொள்ளவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்
(ரி/625)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### காணி விற்பனை

உரும்பிராயில் பலாலி றோட்டிலிருந்து ¼ மைல் தூரத்தில் [கரந்தன் றோட்டில்] இரண்டு கிணறுகளைக் கொண்ட 70 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டியது. S. N. கந்தப்பிள்ளை, நந்தாவில் அம்மன் றோட், கோண்டாவில் மேற்கு.
[35684]

### உடன் விற்பனை

புரொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. சிவப்பு வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் வர இருப்பதால் முன்கூட்டியே பதிவுசெய்க. நா. ஸ்ரீகாந்தன், சிவலிங்கப்புளியடி, இல. 702, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
[35682]

### விற்பனையாகின்றது

விற்பனையாகின்றது. புதிய வெளியீடுகள் புதிய பாடத் திட்டத்திற்கானது. நாமும் சுற்றாடலும் ஆண்டு - 2 தமிழ்மொழி ஆண்டு 1 - 2 (செயல் நூல்) தமிழ் மொழி மொழித் தேர்ச்சியும், இலக்கணமும் ஆண்டு 9, 10, 11 G C E. (O/L) தமிழ்மொழி அடிப்படை அறிவும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 வெளியீடு கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம்.
[8373]

விற்பனையாகின்றது புதிய வெளியீடுகள் புதிய பாடத்திட்டத்திற்கானது புதிய விஞ்ஞானம் பாடப் பொழிப்பும், தொழிற்பாடும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 புதிய சமூகக்கல்வி பாடப் பொழிப்பும், தொழிற்பாடும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 வெளியீடு. கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம்.
[8374]

### குஞ்சுகள் விநியோகம்

புரொயிலர் குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம் நாலுமாதம் நிரம்பிய சிவப்பு [Golden Comet] கோல்டன் சமற் பேட்டுக் கோழிகள் விற்பனைக்குண்டு. இறைச்சிக்கோழி விற்பனை நிலையம், இல. 15/7, முருகேசர் வீதி, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
[35680]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Hyline வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
[35685]

### [illegible]

கார் பற்றறி மூலம் 12'' கறுப்பு - வெள்ளை ரி வியில் சு வாஹினி - மெட்ராஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு அன்ரனா பொருத்தி வசதி செய்து தரப்படும். (கார் பற்றறி, 12'' கறுப்பு - வெள்ளை ரி. வி. உள்ளவர்கள் தொடர்புகொள்க) விஜய்ஸ் டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.
(சி-397)

### வீடு தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: இல. 222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[8383]

### தவறிவிட்டது

வேலாயுதபிள்ளை லோகதாஸ் ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் [703182399V], பல்கலைக்கழக அடையாள அட்டையும் [91/SP/210] தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 77/2, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [தகுந்த சன்மானம் வழங்கப்படும்].
[8382]

### மணமகன் தேவை

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் லிகிதராகக் கடமையாற்றும், உத்தராடம் 1ஆம் பாதம், 8இல் செவ்வாய் உள்ளவருக்கு 33 வயதிற்கு மேற்பட்ட சைவசமய மணமகன் தேவை. அரசாங்கத்திலோ, தனியார்துறையிலோ யாழ்ப்பாணத்தில் வேலை செய்பவர் விரும்பத்தக்கது. இல. 768, மே/பா, உதயன், யாழ்ப்பாணம்
(35674)

### மணப்பெண் தேவை

34 வயது, B Sc. ஆசிரியருக்கு தகுந்த பெண் தேவை. எம்மிடம் பல மணமக்கள் உண்டு. விவரங்களுக்கு தொடர்பு: கடிதமூலம்/நேரில் ஓ. நடராசா, (Retired Forest Officers, உரும்பிராய்)
[35662]

---

உ

## நூல் வெளியீட்டு விழா

இருபதாம் நூற்றாண்டின்
ஈழத்து இசை முன்னோடிகள்

ஆசிரியர்
கலாஜோதி அ. நா. சோமாஸ்கந்தசர்மா
(இணைப்பாளர், வாத்தியத்துறை)
யாழ்/பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகம்

பிரதம விருந்தினர்
கவிஞர், புதுவை இரத்தினதுரை அவர்கள்
(பொறுப்பாளர், விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்)

காலம்: இன்று (15 - 03 - 1995) புதன்கிழமை பி. ப 1.45 மணி

இடம்: இராமநாதன் நுண்கலைக் கழகம், மருதனார்மடம்.

### நிகழ்ச்சி நிரல்

★ மங்களவிளக்கேற்றல்
திருமதி கிரிசாந்தி ரவீந்திரா (நடன விரிவுரையாளர், இ. நு. க.)
திருமதி நந்தினி விஜயரட்ணம் (வீணை விரிவுரையாளர் இ. நு. க.)

★ இறைவணக்கம்
செல்வி சேய்மணி திருஞானசம்பந்தன்

★ அமைதி வணக்கம்

★ வரவேற்புரை
செல்வி ஸ்ரீமோகனா செல்லத்துரை (செயலர் கவின் கலைமன்றம்)

★ தலைமையுரை
செல்வன் எஸ். சிவசிவா (தலைவர், கவின் கலைமன்றம்)

★ அறிமுக உரை
திரு. நா. வீ. மு நவரத்தினம் அவர்கள் (இணைப்பாளர் பண்ணிசைத்துறை, இ. நு. க.)

★ வாழ்த்துரைகள்
கலாநிதி சபா. ஜெயராஜா அவர்கள் (தலைவர், இராமநாதன் நுண்கலைக்கழகம்)
பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் அவர்கள் (தலைவர், இந்துநாகரிகத்துறை)
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் (தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

★ வெளியீட்டுரையும் நூல் வெளியீடும்
பிரதம விருந்தினர் அவர்கள்

★ மதிப்புரை
இயலிசைவாரிதி என். வீரமணிஐயர் அவர்கள்

★ சிறப்புரை
கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் (அமைப்பாளர் அகிலஇலங்கை கம்பன் கழகம்)

★ பதிலுரை
நூல் ஆசிரியர் அவர்கள்

★ நன்றியுரை
செல்வி விமலாம்பிகை இராஜதுரை (உப பொருளாளர் கவின் கலைமன்றம்)

★ கீதவிருந்து
பிரம்மஸ்ரீ எஸ். உமாரமண சர்மா அவர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழாச் சிறப்புற வாழ்த்துகிறோம்
கமலேஸ்வரி களஞ்சியம்
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
[35665]

---

உ

## சிறி பிரியா நகைப் பூங்கா
## ஆரம்ப விழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் பவ வருடம் பங்குனித் திங்கள் 1ஆம் நாள் இன்று (15 - 03 - 1995) புதன்கிழமை அதிகாலை 6-30 மணி முதல் 7-54 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்,

எமமால் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்

★ சிறிபிரியா நகைப்பூங்கா ★

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து தங்களை மகிழ்விக்கவிருப்பதால், அவ்வமயம் தாங்களும் தங்கள் இஷ்டமித்திரர் சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
தங்கள் நல்வரவை நாடும்:
சிறிபிரியா நகைப் பூங்கா
(சாந்தி மலாஸ்)

214, சந்தோஷம் தெரு,
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

---

ஓம் சிவாய நம

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயம்
புதிய சித்திரத்தேர்
## ★ வெள்ளோட்ட விழா ★

மேற்படி ஆலயத்தில் முருகப்பெருமானுக்காக புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று (15-03-1995) மாலை 5-00 மணியளவில் இடம்பெறவுள்ளது

தேர் உருவாக்கம்
மயிலிட்டி சிந்துஜா கலைக்கூட சிற்பாசாரி
விஸ்வப் பிரம்மஸ்ரீ
செல்வன் தம்பிப்பிள்ளை ஸ்ரீதரன்
குழுவினர்

ஆசியுரை:
ஸ்கந்தசாப் பசிவ சிவாச்சாரியார் (குருபீடாதிபதி)
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (துர்க்கா துரந்தரி)
சி. கனரெத்தினம் (தலைவர் திவ்ய ஜீவன சங்கம்)
கு. குமாரக்குருக்கள் (ஆலய பிரதம குரு)
வே. பொ. பாலசிங்கம் (ஆணையாளர் யா.ம சபை)
செல்வி திலகவதி பெரியதம்பி (கல்விப்பணிப்பாளர் வலயம் -I)

★ வெள்ளோட்டத்துடன் சப்பறம் வீதியுலா வரும்

—ஆலயபரிபாலனசபை.

வாழ்த்துவோர்:
சபா புடைவையகம்
நல்லூர் மார்க்கட், கல்வியங்காடு.
[35688]

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 08 — 1922
மறைவு: 26 — 03 — 1994

### அமரர் இ. விஜயசுந்தரம்

(ஓய்வு பெற்ற சிரேஷ்ட சுகாதாரபரிசோதக [S P H.I.] கும சுரோல் [Surol] நிர்வாக உத்தியோகத்தரும்)

திதி: 15 - 03 - 1995

ஆண்டு ஒன்று அகன்றாலும், உங்கள் அன்பு எம்மை விட்டகலாது. உங்கள் ஆசியும், அறிவுரைகளும் இன்று எம்மை வழிநடத்திக் கொண்டிருக்கின்றன.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரர்,

''தங்கவில்லா'',
128, யாழ். வீதி,
மானிப்பாய்.
(35687)

---

## 32ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 04 — 05 — 1923
மறைவு: 12 — 02 — 1995

இமையாணன்
### அமரர் தம்பு முருகன்

திதி: 15—03—1995

மண்மீது தவளாமல் மடிமீது வளர்த்தீர்கள்
மடிபோன துயரத்தில் மனஞ்சோர்ந்து வாடுதையா
துயில்கொள்ளும் போதினிலே உங்கள்
துயில்கொண்டு போர்த்துவீர்கள்
இன்று உங்கள் துயில்கண்ட வேளையிலே
எங்கள் மனம் துவண்டு போகுதையா!

அன்பால், பண்பால், அறிவால் எங்களை வழிநடத்தி, வாழ்வூட்டிய எங்கள் அன்புத் தெய்வமே! எங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது தந்தையின் இறுதிச்சடங்குகளில் கலந்து ஆவன செய்து ஆறுதலளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இன்றைய கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகலரையும் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள், சோதரர்,
பேரர், பூட்டர்,
மைத்துனன்
(இ. வல்லிபுரம் ஆசிரியர்)

சனக்கோட்டம்,
இமையாணன் கிழக்கு,
வல்வெட்டித்துறை.
[8280]

---

கோண்டாவில் கிழக்கு
அருள்மிகு
நாகபூஷணி அம்பாள் ஆலய
8ஆம் திருவிழா
## சப்பற விஞ்ஞாபனம்

காலம்: இன்று (15-03-95) புதன்கிழமை

✶ விசேட நிகழ்ச்சிகள் ✶

நாதஸ்வரக் கச்சேரி முற்பகல் / பிற்பகல்
★ V. K கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினர்
★ T. உதயசங்கர் குழுவினர்
★ S. நித்தியானந்தம்
★ K. சிவகுமார்

வில்லிசை - கலாவினோதன் சின்னமணி குழுவினர்

தமிழீழ இசைக்குழுவினரின் இசைத்தென்றல்

ஒலி அமைப்பு — றட்ணம்ஸ் சவுண்ட் சேவிஸ்
ஒளி அமைப்பு — மனோலைற் கோப்பாய்

—எட்டாம் திருவிழா உபயகாரர்கள்.
(35679)

---

உ
சிவமயம்
வண் வடமேற்கு நாலுகால் மடம்
ஆனைக்கோட்டை
அருள்மிகு ஞான வைரவர் சுவாமி
திருக்கோயில்
9ஆம் நாள் அலங்கார உற்சவ
## விஞ்ஞாபனம்

காலம்: 15 03-1995 புதன்கிழமை

### நிகழ்ச்சி நிரல்

மாலை 6-00 மணி — அபிஷேகம்
இரவு 7-00 மணி — ''இராமாயண தொடர் பேருரை''
நிகழ்த்துபவர்:
வாகீச கலாநிதி கனக நாகேஸ்வரன் (M.A.)
இரவு 8-00 மணி — வசந்த மண்டப பூஜை தொடர்ந்து பெருமான் வீதி வலம் வருதல்
இரவு 9-00 மணிக்கு
அறிவொளி ஐக்கிய கழக ஆதரவில்
''வழக்காடு மன்றம்''
### குற்றக் கூண்டில் இராமன்

நீதிபதி
திரு. அ. குமாரவேல்
(விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி)

குற்றஞ் சுமத்துவோர்
''செஞ்சொற் செல்வன்''
திரு. இரா. செல்வவடிவேல்
திரு. சி. மகேந்திரன்
திரு. யோ. கிரிதரன்

மறுத்து எதிர் வாதிடுவோர்
''வாகீச கலாநிதி''
திரு. கனக. நாகேஸ்வரன்
திரு. க. சிறீதரன்
திரு. சி. ஆர்த்திகன்

''அடியார்கள் வருக, இறையருள் பெறுக''

இங்ஙனம்:
9ஆம் திருவிழா உபயகாரர்
க. தியாகராசா.
[சி-624]

---

யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
கோப்பாய்
முறைசாராக் கல்வியில் தொழில் திறன்
## அபிவிருத்திப் பயிற்சி - 1995

### வானொலி திருத்துதல்

1995ஆம் ஆண்டுக்கான மேற்படி பயிற்சிநெறி 02 - 04 - 1995 இல் யாழ் / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆரம்பமாகும்.

பங்கு பற்ற விரும்புவோர் 25 — 03 — 1995 சனிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

— அதிபர்.
[53683]

---

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்
## விடுமுறை

அன்னைபூபதி நினைவு பொது அறிவுப் போட்டியை முன்னிட்டு சகல தனியார் கல்வி நிறுவனங்களும் 19 - 03 - 1995 (ஞாயிறு) அன்று 6ஆம் ஆண்டு தொடக்கம் 13 ஆம் ஆண்டு வரை காலை 6-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரை வகுப்புக்களை நிறுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.
[சி-760]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
892/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மூன்றாவது போருக்கா?

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நடைபெற்ற பேச்சுக்களின் போதும், பரிமாறப்பட்ட கடிதத் தொடர்புகளின் போதும், விடுதலைப் புலிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட நான்கு முக்கிய கோரிக்கைகளையும் அரசாங்கம் முற்றாக நிராகரித்துவிட்டது!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு கடந்த வெள்ளிக்கிழமை எழுதிய ஆகப்பிந்திய கடிதத்தில்—

வடக்கிற்குப் பாதுகாப்பான பாதை ஒன்றைத் திறப்பதற்கு வசதியாக பூநகரி இராணுவ முகாமை அகற்றுதல்; வடபிரதேசக் கடலில் மீன்பிடிப்பதற்கான தடையை முற்றாக நீக்குதல்; பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குதல்; கிழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஆயுதபாணிகளாக நடமாடுவதற்கு அனுமதித்தல் ஆகிய கோரிக்கைகளை நிராகரித்துள்ளார்.

ஒரு நீடித்த வரைமுறைக்குப் புறம்பான இந்தக் கோரிக்கைகளுக்கு இடமளித்தால், இராணுவ ரீதியில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். தேசிய பந்தோபஸ்தை அரசு விட்டுக்கொடுக்காது — என்று ஜனாதிபதி தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் கோரிக்கைகளாக முன்வைத்த விடயங்களை சந்திரிகா நிபந்தனைகளாகப் பார்த்துத் திகிலடைந்தார்; நிராகரித்து விட்டார்!

அந்த நான்கு கோரிக்கைகளில் முதல் மூன்றும் வடபகுதித் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவை. அவற்றுக்கும் தேசிய பந்தோபஸ்துக்கும் என்ன தொடர்பு என்று ஜனாதிபதி கருதுகிறார்?

மொட்டைத் தலைக்கும் முழந்தாளுக்கும் முடிச்சுப் போடும் தனது கருத்துக்குரிய விளக்கத்தை அவர் தமது கடிதத்தில் தெரிவிக்கவில்லை.

சந்திரிகாவின் பதில் கடிதத்தில் இருந்து அரசின் பின்வரும் நிலைப்பாடுகளை அறிந்துகொள்ள முடிகிறது.

✶ தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் தமிழர்களுக்கு பெரிய சலுகைகளை வழங்கிவிட்டதாக அரசு கருதுகிறது.

★ எனவே, அன்றாடப் பிரச்சினைகளோடு மட்டும் ''வேலை விளைக்கெடாமல்'' அரசியல் தீர்வு குறித்து ஆராய்வது என்று அரசு முடிவு செய்து விட்டது.

நாட்டின் ஜனாதிபதி என்ற வகையிலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண விழைபவர் (அது உண்மையானால்) என்ற வகையிலும் தமிழ் மக்கள் சலுகைகளை எதிர்பார்த்த காலம் மலையேறி விட்டது; தங்கள் உரிமைகளுக்கே போராடுகிறார்கள் என்பதனை சந்திரிகா கருத்தில் கொள்ளாதது பாரதூரமானதாகும்.

மேலும் தமிழ் மக்கள் இயல்பு நிலை வாழ்க்கையை நடத்துவதற்கான வசதிகள் அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அல்ல. அவற்றைச் செய்ய வேண்டியது தமிழர்களைத் தனது பிரஜைகளாகக் கருதும் ஓர் அரசாங்கத்தின் கடமை, பொறுப்பு.

தமிழர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை ஆற்றுவதை அரசு தரப்பிலான விட்டுக்கொடுப்பு என்றும், அதனை இராணுவத்துடன் இணைத்து அல்லது இராணுவ நோக்குடன் அணுகுவதும் சுமுகமான ஒரு சூழ்நிலையை உருவாக்காது.

இராணுவக் கண்ணுடனேயே தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களையும் அரசு நோக்குகிறது என்றால், அது சமாதானமான அரசியல் தீர்வு ஒன்றுக்குப் பதிலாக மூன்றாவது போரை நடத்த முனைகிறது என்பதே அர்த்தம்!

நாட்டின் நலனோடு சம்பந்தப்பட்ட ஒரு விடயத்தை, அரசியல் ரீதியாகத் தீர்த்து வைக்க வேண்டியதை, இராணுவ உபாயங்களுடனும், இராணுவ நலனுக்கு முன்னுரிமை கொடுத்தும் கையாள விரும்பும் அரசால் சமாதானத்தைக் காண முடியும் என்பது ''அழகிய கனவே''!

# தேசிய பாதுகாப்புக் கருதியே பூநகரி முகாமை அகற்றுவதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது

### சந்திரானந்த டீ சில்வா கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 15

தேசிய பாதுகாப்புக் கருதியே பூநகரி இராணுவ முகாமை அகற்றுவதில்லை என்ற முடிவை அரசாங்கம் எடுத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டீ சில்வா முன்கண்டவாறு சண்டே ரைம்ஸுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

பூநகரி இராணுவ முகாமை அகற்றுவதில்லை என்ற முடிவில் அரசு விடாப்பிடியாக நிற்கும் என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் என்ற முறையில் நீங்கள் எண்ணுகின்றீர்களா? என்ற கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

இது விஷயத்தில் அரசு தெளிவாக உள்ளது. பூநகரி இராணுவ முகாம் அகற்றப்படமாட்டாது என்று அரசு மீண்டும் மீண்டும் கூறியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மோதல் தவிர்ப்பு நிலை மீறல்கள் சில கிழக்கில் ஏற்பட்டுள்ளனவே. இது பற்றி விளக்குவீர்களா? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் —

உள்ளூர் மட்டத்தில்தான் மீறல்கள் இடம்பெற்றுள்ளன. அப்படி மீறல்கள் ஏதும் இருப்பின் உள்ளூர்த் தலைவர்கள் பேச்சுகள் மூலம் தீர்த்துக் கொள்வர் என்று தெரிவித்தார்.

பதுங்கு குழிகள் அமைப்பதிலும், இராணுவ பலத்தை கட்டி எழுப்புவதிலும் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டுகள் பற்றி கவனித்தோம் அப்படியான நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்று இராணுவம் மறுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கேள்வி: சமாதானப் பேச்சு தோற்றால் இராணுவம் தயார் நிலையில் உள்ளதா?

சந்திரானந்த டீ சில்வா: நாம் ஏன் அவ்வளவு நம்பிக்கையிழந்து இருக்க வேண்டும்? இராணுவம் இருக்கிறது. அவர்கள் நாட்டை எந்த நேரமும் பாதுகாப்பார்கள். எப்படியாயினும் எல்லாரும் சமாதானம் குறித்து நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

கேள்வி: சமாதானப்பேச்சுகள் ஆரம்பமான தன் பின்னர் யாழ்ப்பாணத்தின்பொது நிலைவரம் பற்றி அங்கிருந்து உங்களுக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளனவா?

பதில்: ஆம் யாழ்ப்பாணத்தில் வாழ்க்கை பதற்றத்திலிருந்து விடுபட்டுள்ளது. பயமின்றி மக்கள் நடமாடுகிறார்கள் சமாதானப் பேச்சுக்கு முன்பு அங்கு பயமும் பதற்றமும் நிலவியது. இப்போது அங்கு நம்பிக்கை ஒளி தெரிகிறது. பத்தாண்டுகளில்முதல் தடவையாக இப்போது அங்கு நம்பிக்கை தென்படுகிறது. இதனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

பிரச்சினைக்குரிய ஆயுதக் கொள்வனவு குறித்து கருத்து வெளியிடப்போவதில்லை என்று அவர் கூறினார்.

கேள்வி: விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் என்று நிச்சயமாகக் கூறுவீர்களா?

சந்திரானந்த: உங்கள் கேள்விக்கு இந்த விதத்தில் பதிலளிக்கலாமா?

இவ்வளவு ஆண்டுகளாக நடைபெற்று வந்த யுத்தத்துக்கு பின்பு எமக்குநம்பிக்கை தேவைப்படுகிறது. இதனை விட சிறந்த மாற்று வழி இல்லை சமாதானப் பேச்சுவார்த்தை இங்குள்ளோருக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ளோருக்கும் நம்பிக்கையைக் கொடுக்கிறது: இராணுவமும் இதில் அடங்குகின்றது.(இ-எ)

## புலிகளுடன் பேச அஷ்ரப் விருப்பம்

கொழும்பு, மார்ச் 15

விடுதலைப்புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்கத்தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்து கடந்த மே மாதம் விடுதலைப் புலிகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செய்தி அனுப்பியதாகவும் ஆனால் அதற்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை என்றும் அஷ்ரப் மேலும் தெரிவித்தார் (இ)

## வாசுவின் பதவி துறப்பு யோசனை நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 15

லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் தங்கள் பதவிகளை உடனடியாகத் துறக்கவேண்டும்என்று இரத்தினபுரி மாவட்ட எம். பி. வாசுதேவ நாணயக்கார விடுத்த யோசனையை, கட்சியின் அரசியல் குழு நிராகரித்து விட்டது

ல. ச. ச. க. தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற அரசியல் குழுக்கூட்டத்தில் அவர் இந்த யோசனையைச் சமர்ப்பித்தார்.

(இ-எ)

கல்வியியல் கல்லூரி

## விரிவுரையாளர்- ஊழியர் வவுனியாவில் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 15

வவுனியா கல்வியியல் கல்லூரியில் கடந்த வியாழன் இரவு இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் காயமடைந்த சிலர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குடிபோதையில் வந்த விடுதிச் சிற்றூழியர்களுக்கும் விரிவுரையாளர்களுக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதம், கைகலப்பில் முடிந்ததாகவும்—

விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் எவரும் இக் கைகலப்பில் கலந்துகொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் போது விடுதிக் கண்ணாடிகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. (இ-4)

## யுத்தக் கைதிகளின் நிலை குறித்து அதிகாரிகளுடன் அனுருத்த ஆராய்வு

கொழும்பு, மார்ச் 15

யாழ்ப்பாணத்தில் சாகும் வரை உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ள யுத்தக் கைதிகள் குறித்து பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை கடந்த சனிக்கிழமை கொழும்பில் பொலீஸ் உயர் அதிகாரிகளுடன் ஆராய்ந்தார்.

உண்ணாவிரதம் இருக்கும் 16 யுத்தக் கைதிகளுக்குப் பதிலாக காவலில் உள்ள 16விடுதலைப் புலிகளை விடுவிப்பது பற்றி இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

யுத்தக் கைதிகளின் உண்ணாவிரதம் குறித்து அரசுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை அரசிடமிருந்து பதில் எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## இலவச திருமணப் பதிவுகள்

வலி – தெற்கு, மார்ச் 15

உடுவில் அலிஸ்ரன் சனசமூக நிலையப் பகுதியில் வாழும் பல குடும்பங்களுக்கு இலவசமாக திருமணப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதனை வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசம் ஒழுங்கு செய்திருந்தது.

திருமணப் பதிவுகளை, உடுவில் பிரிவு பிறப்பு, இறப்பு பதிவாளர் திரு. செ. அன்னலிங்கம் மேற்கொண்டார். (இ-5-152)

## பெண்கள் தினம்

யாழ்ப்பாணம், மார்ச்.15

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை மகளிர் குழு நடத்தும் அனைத்துலக பெண்கள் தினம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி கு.சிவராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக நல்லூர் பிரதேச செயலரும் பிரதிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான திருமதி க.சிவசிதம்பரம் கலந்துகொள்கிறார். (ஒ-4)

## பாடசாலைகளில்

கைதடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 00மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் இ. செ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க்கலவன்பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு அதிபர் த. குமாரசாமி தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திரு. ச. கைலாசநாதன் தலைமையில் நடைபெறும். [இ-152]

★ ★ ★

புத்தூர் நவக்கிரி, அ. மி. த. க. பாடசாலையின் வருடாந்த, இல்ல தடகளப் போட்டிகள் இன்று 15 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

பாடசாலை மைதானத்தில், பாடசாலை அதிபர் திரு. செ. செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், வலி- கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலக, திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. மு. பாலசிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். [இ-5]

★ ★ ★

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் இல்லத் தடகள ஆட்டவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 1,30 மணி முதல் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. மு பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக நல்லூர்உதவிக் கல்விப் பணிப்பாளர்திரு இ இராஜமணியும் கௌரவ விருந்தினராக நல்லூர் வட்டவைப் பொறுப்பாளர் திரு. வை' செல்வமும் கலந்து கொள்வர். (ஐ)

★ ★ ★

கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு பாடசாலைக்கு முன்பாகவுள்ள மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் திரு.வ வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும்இந்நிகழ்வில் வலயம் 2 இன்கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

★ ★ ★

சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு அதிபர் திரு. விதனலிங்கம் தலைமையி. நடைபெறும். (இ-15)

★ ★ ★

ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திரு. பொ. கணேஸ்வரலிங்கம் தலைமையில் நடைபெறும். இளைப்பாறிய யூனியன் கல்லூரி அதிபர் திரு. நா. கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ)

★ ★ ★

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2மணிக்கு அதிபர் திரு. க. கந்தையா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். கல்வித் திணைக்கள உடற்கல்வி அதிகாரி திரு. எஸ். அருணகிரிராஜா கலந்து கொள்வார்.

## கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள 'சுயமதிப்பும் ஆளுமையும்' என்னும் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு யாழ். பல்கலைக் கழக நல்லாயன் நடுநிலையத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அருட்திரு எஸ். ஈ. றெஜிவோல்டின் கருத்துரையும் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும். (ஒ-14)

## ஆலயங்களில்

அல்வாய் வடக்கு வியாபாரிமூலை வீரபத்திரர் ஆலய இரதோற்சவம் இன்று புதன் கிழமையும், தீர்த்தோற்சவம் நாளை வியாழக்கிழமையும் நடைபெறும். (இ-14-173)

★ ★ ★

பொலிகண்டி கிழக்கு கல்வியம்பதி வீரகத்தி விநாயகர் ஆலய இரதோற்சவம் இன்று புதன்கிழமையும் தீர்த்தோற்சவம் நாளை வியாழக்கிழமையும் இடம் பெறும்.

## மட்டக்களப்பில் 7 வயது சிறுவன் கொலை

### பணத்துக்காக கடத்தினர்

மட்டக்களப்பு மார்ச் 15

அச்சக முதலாளி ஒருவரை மிரட்டி பணம் பறிக்க முயன்ற இரு இளைஞர்கள் தமது எண்ணம் ஈடேறாததால் அவரின் 7வயது மகனை கொலை செய்து சடலத்தை வாவியில் வீசினர்.

இச் சம்பவம் கடந்த வாரம் மட்டக்களப்பில் இடம் பெற்றது

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது;

சம்பவம் நடைபெறுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் 25 ஆயிரம் ரூபா பணம் தரவேண்டும் என இச் சிறுவனின் தந்தைக்கு இயக்கம் ஒன்றின் பெயரில் மிரட்டல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது.

அவ்வாறு பணம் தரப்படாவிட்டால் அவர்களது குடும்பத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன்பின், பாடசாலைக்குச்சென்ற அச்சக உரிமையாளரின் மகனான இராஜதேவன் வீடு திரும்பவில்லை.

அதனையடுத்து இச் சிறுவனின் தந்தையாரான வையாளி இரட்ணம், மட்டக்களப்பு பொலீஸில் புகார் செய்தார்.

அடுத்த நாள் இராஜதேவனின் உடல் வாவியில் மூழ்கிய நிலையில் பொலீசாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

பொலீசார் சந்தேகத்தின் பேரில் அச்சக ஊழியர்களை விசாரணைக்குட்படுத்தினர்.

அச்சகத்தில் சோதனை நடத்தியபோது அங்கிருந்த வங்கிப் படிவம் ஒன்றில் காணப்பட்ட கையெழுத்தும், மிரட்டல் கடிதத்தில் காணப்பட்ட கையெழுத்தும் ஒரே நபரினுடையது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் மாமாங்கம் குடியேற்றப் பகுதியைச் சேர்ந்த செ. சுபராஜ் (18), தி. விஷ்ணுகாந்தன் ஆகிய இரு இளைஞர்களையும் கைது செய்தனர்.

இச் சந்தேக நபர்கள் சில மாதங்களுக்கு முன்பு தான் பிரஸ்தாப அச்சகத்தில் இருந்து வேலையை விட்டு நீங்கியவர்கள் என்பது தெரியவந்தது.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜே. விஸ்வநாதன் கழுத்து நெரிக்கப்பட்டு, கொலை நடந்துள்ளதாகத் தீர்ப்பளித்தார்.

சந்தேக நபர்களை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறும் அவர் உத்தரவிட்டார் [இ-5]

## வடக்கு- கிழக்கு மாகாணங்களில் பனை அபிவிருத்திக்கு ரூ.69 இலட்சம்

### புதிய தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 15

வடக்கு — கிழக்கு மாகாணங்களில், பனைவள அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு 69 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட உள்ளது

இத் தகவலை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. பாக்கியநாதன் தெரிவித்துள்ளார்.

பனைவள அபிவிருத்தி தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று முன்தினம், யாழ். செயலகத்தில் இடம் பெற்றது.

இக் கூட்டத்திற்கு யாழ். அரச அதிபர் தலைமை வகித்தார்.

திரு. பாக்கியநாதன் அங்கு மேலும்பேசுகையில் — கிடைக்கவுள்ள நிதியில் 60 இலட்சம் ரூபாஅரசநிதியில் இருந்தும்— மிகுதி 9 இலட்சம் ரூபா பனை உற்பத்திப் பொருள்களை விற்பனைசெய்வதன் மூலமும் பெறப்படும்

எனது பதவிக் காலத்தில் பனைவள அபிவிருத்தித் திட்டங்களை வெளிப்படையாகவே மேற்கொள்ள இருக்கிறேன்.

பனைவள அபிவிருத்தித் திட்டங்களில் பதநீர், வடிசாராயம், பனை வெல்லம், ஒடியல், பனங்கிழங்குகள் என்பவற்றின் உற்பத்தியை அதிகரித்தல், கைப்பணிப் பொருள்களை உற்பத்தி செய்தல், பனந்தும்பு பிரித்தெடுத்தல் முதலிய திட்டங்கள் விரிவுபடுத்தப்பட உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

பனந்தும்பு உற்பத்தியினை மேற்கொள்ளுவதற்கென தும்பு அடிக்கும் இயந்திரங்கள் இரண்டு தருவிக்கப்பட இருப்பதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

பனைவள உற்பத்திப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து, அவற்றுக்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொள்வது தொடர்பான ஆலோசனை ஒன்றும் இக் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டது. (இ-5-7)

பனை அபிவிருத்திச் சபை

## தலைமையகம் இனி இங்கு இயங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 15

பனை அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகம் இனிமேல் யாழ்ப்பாணத்திலேயே இயங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும், பனை அபிவிருத்திச் சபைத் தலைமைச் செயலகம் கொழும்பிலேயே இயங்கி வந்தது,

இதன்படி இனிமேல் வட-கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பனைவள அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் இச் சபையின் நேரடிக் கண்காணிப்பின் கீழேயே நடைமுறைப்படுத்தப்படும். (இ-5-7)

## அகதிகளின் பொருள்களை 3 லொறிகளில் பொலீஸார் எடுத்துச் சென்றனர்

யாழ்ப்பாணம், மார்ச் 15

தமிழகத்திலிருந்து திரும்பிய இலங்கை அகதிகள் கொண்டு வந்த பொதிகளில் 118 பொதிகளை கொழும்பிலிருந்து வந்த சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

திருமலையில் இச்சம்பவம் இடம் பெற்றது.

அகதிகள் தங்கியிருந்த உப்புவெளி அகதிகள் இடம்பெயர் முகாமில் திடீர் பரிசோதனையை நடத்திய சுங்க அதிகாரிகள் அளவுக்கு அதிகமாக கொண்டு வரப்பட்டுள்ள பொருள்களுக்குச்சுங்கத்தீர்வை விதிக்கப்பட்ட வேண்டும் என்று வற்புறுத்தினர்.

பின்னர் மூன்று லொறிகளில் அவற்றை ஏற்றிச் சென்றனர்.

இந்த 3 லொறிகளையும் அகதிகள் சுற்றிவளைத்து ஆட்சேபம் தெரிவித்துள்ளதாகவும்—

பொலீஸாரின் துணையுடன் அகதிகள் அப்புறப்படுத்தப்பட்டு பொருள்கள் கொண்டு செல்லப்பட்டதாகவும் அகதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

அகதிகளை சில முதலாளிமார் தமது வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்துவதாகவும் இதனை அகதிகள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் யாழ். மாவட்ட எம். பி. ஒருவர் தெரிவித்தார். (இ-14)

## மாணவரின் ஆற்றலை அறிந்து திறனை வளர்க்க வேண்டும்

### பரிசளிப்பு விழாவில் உரை

வலி – மேற்கு, மார்ச். 15

'மாணவர்கள் எத்துறையில் ஆற்றல் உடையவர்களாக இருக்கிறார்களோ, அந்தத் துறையில் அவர்களின் திறன்களை வளர்க்க பெற்றோர் முன்வர வேண்டும்'

— காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கல்வி வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி தமது உரையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகப் பட்டத்தை மட்டும் நம்பியிராமல், பிள்ளைகள் தமது எதிர்கால வாழ்க்கையை, தம் திறமைக்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ள அவர்களை வழி நடத்த வேண்டும்.

மாணவர்களை [illegible] தேச நிலமைகளுக்கேற்ப ஆற்றல்படுத்தப்ப[illegible] மாணவர்களது உள்ளார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்யக் கூடிய செயற்பாடுகளில் ஆசிரியர்கள் ஈடுபட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திரு. ந. பரமசிவம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரமுகர்கள் பலரது சிறப்புரைகள்இடம் பெற்றதுடன், சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் என்பனவும் வழங்கப்பட்டன. [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### வயித்தி கபிரியேல்

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது இல. 8 இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான வயித்தி கபிரியேல் 12-03-95 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பிரகாசியின் அன்புக் கணவரும், சக்கரியாஸ், யேசுரெத்தினம் (இத்தாலி), அக்கினேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், மரிசிலினா பேபி, றோஸ் [இத்தாலி], எட்வேட் ஆகியோரின் அன்பு மாமனாரும், டெனிஸ்ரன், டேறோணி, டில்சன் [போராளி), டிலன், பிறின்சி [இத்தாலி], மெலின்சி [இத்தாலி] ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை [15 03-95] பிற்பகல் 3 மணிக்கு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. க. சக்கரியாஸ் (மகன்)
திரு. ஆ. எட்வேட் (மருமகன்)

இல. 8, இராசாவின் தோட்ட -
ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [35701]

### காசிநாதர் கந்தையா

ஓய்வு பெற்ற மாவட்ட தொலைத் தொடர்பு பரிசோதகர்)

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த காசிநாதர்கந்தையா காலமானார்.

இவர் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், திரு. நவரட்ணராஜா (பொறியியலாளர் - லண்டன்), காலஞ்சென்ற புவனேஸ்வரி, Dr சிவராசா அமெரிக்கா), திருமதி க. நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி ந தாமரைச்செல்வி (லண்டன்), திருமதி சி. அருந்தா [அமெரிக்கா], கதிரவேற்பிள்ளை (ஓய்வு பெற்ற நில அளவை படவரைஞர்] ஆகியோரின் அன்பு மாமனாரும், இரவீந்திரன் [ஆசிரியர் யா/சரணவாய் மகா வித்தியாலயம்], பிரதீபன் [லண்டன்], சாந்தி [மெதடிஸ்த பெண்கள் கல்லூரி], காண்டீபன் [ஹாட்லிக்கல்லூரி] மீரா [லண்டன்], சந்திரா [லண்டன்], செலினா [லண்டன்], சுரேன் [அமெரிக்கா] ஆகியோரின் அன்புப் பேரனும், ஐங்கரன், நிலோசன் ஆகியோரின் பீட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று [14 3 95] மாலை அவாது சுடுமயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
த. இரவீந்திரன்
(பேரன்)

கரவெட்டி. [35692]

### S. S. செல்லத்துரை
(இளைப்பாறிய அதிபர், அ. மி. கல்லூரி, உடுப்பிட்டி)

மீசாலையை பிறப்பிடமாகவும், கல்லுவம், கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல் சரவணமுத்து செல்லத்துரை அவர்கள் 10-03-95 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மா [இளைப்பாறிய ஆசிரியை] அவர்களின் அன்புக் கணவரும், Dr செல்வச்சந்திரன் [U K], Dr. செல்வராஜன் (U K) ஆகியோரின் அருமைத் தந்தையும், பிரிந்தா, இராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரிந்தினி, சசிகலா, சுதன், இராஜேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும், தம்பிஐயா (இளைப்பாறிய வரி மதிப்பாளர்], திருமதி தங்கம்மா, ஆறுமுகம், காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் அன்புச்சகோதரனும், திருமதி ஞானரத்தினம், சிவபாதம், திருமதி முத்தம்மா, திருமதி பாக்கியம் ஆகியோரின் மைத்துனரும், திருமதி முருகதாஸ் (பிரதேச செயலகம், நல்லூர்), திருமதி லோகநாதன், தவமலர் ஆகியோரின் பெரிய தகப்பனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 15-3-95 (புதன்கிழமை) காலை 9 மணிக்கு அவரது கல்லுவம் இல்லத்தில் நடைபெறும். அதன் பின்னர் அன்னாரின் நல்லுடல் அஞ்சலிக்காக உடுப்பிட்டி அ மி கல்லூரியில் வைக்கப்பட்டு அங்கிருந்து நல்லடக்கத்திற்காக உடுப்பிட்டி தென் இந்தியத்திருச் சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ச. தம்பிஐயா
[சகோதரன்]

கல்லுவம்
கரவெட்டி. [35695]

### சந்தியாகோ சவரிமுத்து

சந்தியாகோ சவரிமுத்து நேற்று 14-3-95 காலமானார்.

இவர் காலஞ்சென்ற சந்தியாகோ, அன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், தெரேசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ்கா, மரியாம்பிள்ளை (ஆசிரியர்), அந்தோனியாப்பிள்ளை (ஆசிரியை] ஆகியோரினதும், தெரேசம்மாவினதும் அன்புச் சகோதரனும், மேரி புளோறா [இந்தியா], மேரி கொறற்றா [அவுஸ்திரேலியா], மேரி சரஞ்சியா [யாழ். அரசினர் பொது வைத்தியசாலை], வினஸ் அன்ரனி (தொழில் நுட்பவியலாளர், அவுஸ்திரேலியா), மேரி றேஸ் (அவுஸ்திரேலியா), மேரி பியன்கா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புக் தந்தையும், சீமாம்பிள்ளை, மேரிலூட்ஸ் (அவுஸ்திரேலியா), துரைரட்ணம் (அவுஸ்திரேலியா), நம்பிரான் [அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜித், அன்ரனி இந்தியா), சஞ்சி தஷித்தா (அவுஸ்திரேலியா), நிஷாசி நிருபா [அவுஸ்திரேலியா], சுனித் காஷித் (அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று [15 3 95] மாலை 4 மணியளவில் புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் நடைபெற்று அவரின் பூதவுடல் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சரஞ்சியா சீமாம்பிள்ளை
[மகள்]

14/2, முதல் ஒழுங்கை,
கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [35699]

## பேச்சில் முன்னேற்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பேச்சுவார்த்தையில் ஆக்கபூர்வமான முன்னேற்றத்தை காணும் போது மட்டுமே அவர்களின் நிபந்தனைகளை வழங்க முடியும் — என்றார்.

பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு காண்பதை தவிர்க்கும் நோக்கத்துடன் தான் புலிகள் வேண்டுமென்றே சாட்டுக்களைக் கூறுவதாக நினைக்கிறீர்களா? என்று — செய்தியாளர் கேட்டதற்கு—

இல்லை. நான் அவ்வாறு நினைக்கவில்லை. கடந்த அரசாங்கத்தின் மீது விடுதலைப் புலிகளுக்கும் சரி, தமிழ் மக்களுக்கும் சரி நம்பிக்கை இருக்கவில்லை

ஆனால் இப்போது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. தமிழ் மக்களுக்கு எமது அரசாங்கம் மீது முழு நம்பிக்கை உண்டு. அதனை உணர்ந்து விடுதலைப் புலிகள் செயற்படுகிறார்கள் — என்று பதிலளித்தார். [அ]

### டென்மார்க்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
திப்பு சுமுகமான முறையில் நடைபெற்றது என்றும் —

அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து தாம் பேசியதாகவும் —

மாநாடு நடைபெற்ற சமயம் மண்டபத்துக்கு வெளியே புலிகள் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகர் இருந்தது தனக்கு முன்னரே தெரியும் என்றும் —

ஜனாதிபதி பின்னர் பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது ஆராயப்பட்ட விடயங்கள் பற்றிய தகவல் ஏதும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை. [உ-4-6]

### கப்பலில்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பட்டிருந்த 291 தபால்பொதிகளும் நேற்றே கப்பலில் இருந்து இறக்கப்பட்டு யாழ் பிரதம தபாலகத்துக்கு எடுத்து வரப்பட்டன. (ஒ-4)

### வளன்புரம்
### புனித சூசையப்பர் திருவிழா

வளன்புரம், கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் 16 ஆம் திகதி மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி 3 நாட்கள் ஆயத்த ஆராதனைகள் நடைபெறும். எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிறு காலை 5.15 மணிக்கு முதற் திருப்பலியும் காலை 6.30 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டு பெருநாள் நிறைவுறும்.

அருட்திரு ஜி. ஜெயக்குமார்
(பங்குத் தந்தை)

[35691]

உ
சிவமயம்

### இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்
### "இந்து தர்மம்" மலர் - 6
(மாதாந்த ஆத்மீக சஞ்சிகை, பங்குனி மாதம்)

## ★ வெளியீட்டு விழா ★

இடம்: சுன்னாகம் ஐயனார் கோயில்
காலம்: நாளை (16-03 1995) வியாழக்கிழமை முற்பகல் 11. 00 மணி (தேர்த்திருவிழா அன்று)
தலைவர்: ஆத்மஜோதி திரு. நா. முத்தையா

நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்:
ஐயனார் கோயில் பூசகர்கள்
திரு. ஐ. கந்தசாமி, திரு. பெ. வாமதேவன்
தேவாரம்
மௌனாஞ்சலி
வரவேற்புரை:
திரு. சி. சக்திகிரீவன்
(செயலாளர், இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்)
ஆசியுரை:
★ ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் [நல்லை ஆதீன குரு மஹா சன்னிதானம்]
★ மஹாராஜஸ்ரீ சு.து ஷண்முகநாதக் குருக்கள் [பாவை ஆதீனகர்த்தா]
★ கிரியாகிரமஜோதி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் [செயலாளர், சிவானந்த குருகுலம்]
வெளியீட்டுரை:
வே. பொ. பாலசிங்கம் [யாழ். மாநகர ஆணையாளர்]
அறிமுகவுரை:
திரு. மா வேதநாதன் M.A. [சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத் துறை, யாழ். பல்கலைக்கழகம்]
முதற்பிரதி பெறுவோர்:
திரு சி. குமாரவேல் (தேர்த்திருவிழா உபயகாரர்]
திரு. சோ. அருணகிரிநாதன் [சக்தி பார்மசி, சுன்னாகம்]
திரு. கு. பாலசிங்கம்
Dr ஆ. சிவபாதம்
நன்றியுரை:
பிரம்மஸ்ரீ ந. சதாசிவஐயர் [உப செயலாளர், இந்துசமயப் பேரவை]
தேவாரம்

அனைத்து இந்துக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நூல் வெளியீட்டு உதவியும் விழா ஏற்பாடும் சுன்னாகம் வாழ் இந்துசமய அபிமானிகள்.

நா. முத்தையா — தலைவர்
சி. சக்திகிரீவன் — செயலாளர்

இந்துசமயப் பேரவை,
நல்லை ஆதீனம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (சி/763]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) [illegible] 283/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15 03 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செவ்வரத்தம் பூ

யாழ்ப்பாணம், மார்ச் 15

திரு. ந கிருஷ்ணசிங்கம் எழுதிய செவ்வரத்தம் பூ — சிறுகதைத் தொகுதி வெளியீடு இன்று புதன்கிழமை மாலை 4-30 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கில் நடைபெறும்.

நிதர்சனப் பொறுப்பாளர் திரு நா. தமிழன்பன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஆசியுரையை திரு. ந. வீரமணிஐயர் வழங்குவார். வெளியீட்டு உரையை கவிஞர் புதுவை இரத்தினதுரையும் மதிப்புரையை திரு. தேவர் திருமதி ஆதிலட்சுமி சிவகுமார், பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோரும் சிறப்புரையை சொக்கனும் வழங்குவார்கள்.

தொடர்ந்து யாழ். பிரதேச திட்டமிடல் பணிப்பாளர் திரு.செ பத்மநாதன், றேடியன் கல்வி நிலைய இயக்குநர் திரு. சி. சிவமோகன் ஆகியோரின் உரைகளும், நூலாசிரியரின் பதில் உரையும் இடம்பெறும். முதற் பிரதியை த. வி. பு உறுப்பினர் திரு. இ. பரதன் பெற்றுக் கொள்வார். (இ-14)

### கைநூல்

யாழ்ப்பாணம், மார்ச் 15

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடல்வள அபிவிருத்திப் பகுதியின் கடல்வள பாடத்திட்ட ஆசிரியக் கைநூல் வெளியீடும், பயிலுநர்களுக்கான சான்றிதழ வழங்கும் வைபவமும் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில நடைபெறும். (இ 14)

### கிரிக்கெட்

யாழ்ப்பாணப் பாடசாலைகள் அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டிகளில் இன்று பிற்பகல் 2-15 மணி முதலும் தொடர்ந்து நாளை வியாழக்கிழமை காலை 8-30 மணி முதலும் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:

★ கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கொக்குவல் இந்துக் கல்லூரி அணி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

★ சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி எதிர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. [உ-20]

### தற்கொலை

சிப்பாய் ஒருவர் தனைத் தானே சுட்டு தற்கொலை செய்துள்ளார். வாழைச்சேனை புலிபாய்ந்த கல் இராணுவ முகாமில இந்தச் சம்பவம இடம்பெற்றுள்ளது.

தற்கொலை செய்து கொண்ட இராணுவச் சிப்பாய் இரண்டாம லெப்ரினன்ட் தரத்தைக் கொண்டவர் ஆவார். [ஒ-4]

### கூடுதல்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான ஆணைக்குழு கடந்தமாதம் 21 ஆம் திகதி தொடக்கம் அரசியல் கட்சி பிரதிநிதிகளின் கருத்துக்களை பெற்று வருவதும் —

தெரிவுக்குழு முன்னிலையில் இதுவரை தோன்றிய தமிழ்க் கட்சிகள், அதிகாரப் பரவலாக்கல் சமஷ்டி அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தியதும் குறிப்பிடத்தக்கன. [ஒ-14]

### மரண அறிவித்தல்
### வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

[ஓய்வு பெற்ற தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்]

நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னத்தம்பி நேற்று முளங்காவிலில் காலமானார்.

இவர் வள்ளியம்மையின் அன்புக் கணவரும், கனகாம்பிகை, லலிதாம்பிகை, கிருபாலினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
வே. கனகாம்பிகை
[மகள்]

88/12,
குருநாதசுவாமி கோயில் வீதி,
கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (35706)

### யா / மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை
### பாடசாலை அபிவிருத்திச் சபை

## பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் 02-04-95 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திரு. க. நாகராசா தலைமையில் நடைபெறும். சகல ஆசிரியர்களையும், கல்லூரியில் கல்விகற்கும் மாணவரின் பெற்றோர்களையும், சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

திரு. க. நாகராசா (அதிபர்) — தலைவர்.
திரு. செ. சிவபாலன் — செயலாளர்.

(சி/5785)

## நன்றி நவிலல்

### கு முருகையா

ஊரெழு குழக்கு, வசந்தி வீதியில் வசித்தவரும், புன்னாலைக் கட்டுவன் லக்சமி பவான், கோண்டாவில் ஆரிய பவான் உரிமையாளருமாகிய உயர் திரு கு. முருகையா அவர்கள் ஞாயிற்றுக்கிழமை 12-03-1995 இல் சிவபதம் அடைந்த செய்தியைக்கேட்டு, அவருடைய மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் யாழ் மத்தியகல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றி அறிதலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அன்னாரின் சிகிச்சை நேரத்தில் பேருதவி புரிந்த வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்
மனைவி மு. சரோஜினி
பிள்ளைகள். மு. சுகந்தினி
மு. கேதீஸ்வரி
மு. ராஜேஸ்கண்ணா
மு. கோகிலவாணி

[8386]

## மரண அறிவித்தல்கள்

### V. K. சின்னத்துரை
(காரைநகர்)

காரைநகர் ஆயிலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 7 ஆம் வாய்க்கால் கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்டவருமான V. K. சின்னத்துரை 13-3-95 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி கணபதிப்பிள்ளை (பெரியபொடியர்) அவர்களின் அன்புமகனும், காலஞ்சென்ற திரு. திருமதி வர்ணகுலசிங்கத்தின் அன்பு மருமகனும், அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், வசந்தராதேவி, நகுலேஸ்வரி, கலாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேந்திரா, மகேந்திரன், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனாரும், இராஜீவன், காலஞ்சென்ற சிவஜீவன், மற்றும் வாசுகி, உமாதர்ஷினி, காயத்ரி, சிவகங்கா, கார்த்திகா, சிந்துஜா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை [16 3-95] காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. இராஜேந்திரா
[மருமகன்]

45/4, ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம் [35705]

### திருமதி
### நாகரட்ணம் சொர்ணலிங்கம்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி நாகரட்ணம் சொர்ணலிங்கம் 12-3-95 அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற விசாலாட்சி, தம்பதிகளின் அன்பு மகளும், க. நாகராஜா (இளைப்பாறிய ஆசிரியர்) க. நாகசெல்வம் (Haran Engineering Work Shop) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி ரமணி துரைசிங்கநாதன் (கனடா), திருமதி யசோதரா தர்மராஜா, திருமதி அனுசூயா லோகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், த. சுஜன், து. ராகவன், ம. சிவசாமியின் அன்பு பேர்த்தியாரும் ஆவர்.

இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை (16-3-95) காலை 10 00 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க. நாகராஜா
(சகோதரன்)

வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை. (35702)

### அப்பாவுச்செட்டியார் பாலகிருஷ்ணசாமி

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த அப்பாவுச் செட்டியார் பாலகிருஷ்ணசாமி நேற்று காலமானார்.

அன்னார் திருமதி அம்மணி அம்மாவின் அன்புக் கணவரும், தியாகராஜாவின் (ஜேர்மனி) தகப்பனாரும், கௌரிதேவியின் மாமனாரும், பானுகோபன், தஷியந்தன், பானுரேகா, ஆராமுதன் ஆகியோரின் அருமைப் பேரனும், காலம்சென்ற இராஜகோபாலசாமி, ரங்கசாமி, ஸ்ரீனிவாசன் ஆகியோரின் மூத்த தமயனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15-3-95) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
தி: கௌரிதேவி
(மருமகள்)

13. ஸ்ரீ வேங்கடேசன் வீதி
யாழ்ப்பாணம் (35704)